# உங்கள் குழந்தை பிறப்பதற்கு முன்பே இறந்துவிட்டதைப் பற்றி நீங்கள் அறிவீர்களா ?



Dasanayake D L W (1) , Marleen F S (2) , Dodampahala S H (3)
*on behalf of the Sri Lanka College of Obstetricians & Gynaecologists*

*1-Professor of Obstetrics & Gynaecology, Chair Professor, Dept. of Obstetrics & Gynaecology, Faculty of Medicine, University of Ruhuna*
*2-Consultant Obstetrician & Gynaecologist, Sri JayawardenapuraGeneral Hospital*
*3-Professor in Obstetrics & Gynaecology, Faculty of Medicine, University of Colombo*

*Correspondence –Sri Lanka College of Obstetricians & Gynaecologists, No.112, Model farm road, Colombo 08   Email - slcogoffice@gmail.com*

நான் 36 வாரக்  கர்ப்பமாக உள்ளேன். என் குழந்தை வயிற்றின் உள்ளேயே இறந்துவிட்டதாக மருத்துவர்கள்  உறுதி செய்தனர். எனது குழந்தை வயிற்றின் உள்ளேயே இறந்ததற்க்கான காரணங்கள் எவை ? இந்தக் குழந்தையை எப்படிப் பெற்றெடுப்பது? இதற்குப் பிறகும்,  என் எல்லாக் கர்ப்பங்களுக்கும் இப்படித்தான் நடக்குமா ?



Correspondence –Sri Lanka College of Obstetricians & Gynaecologists, No.112, Model farm road, Colombo 08   Email - slcogoffice@gmail.com

உங்கள் குழந்தை பிறக்கும்போதே இறந்துவிட்டதாகச் சொல்லக்கேட்பது மிகவும் கடினமான காரியம். இது பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு மிகவும் சோகமான நிகழ்வு. இத்தகைய சூழ்நிலையில், உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் மருத்துவக் குழுவின் வலுவான ஆதரவு இருக்கும். ஆனால் அந்த நேரத்தில் குழந்தையின் இறப்புக்கான காரணங்களை விளக்கினாலும் அதைச் சரியாகப் புரிந்துகொள்ளும் அளவுக்கு மன நிலை தெளிவில்லாமல் இருக்குமாதலால் இறப்புக்கான காரணங்களை எழுத்து பூர்வமாகத் தருவது மிகவும் அவசியம்.

அத்தகைய சூழ்நிலையை நீங்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தால், மருத்துவ ஊழியர்களிடமிருந்து நீங்கள் பெறும் ஆதரவு மற்றும் எதிர்காலத்தில் நீங்கள் கருத்தரிக்கும்போது உங்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஆலோசனைகள் பற்றி இந்தத் துண்டுப்பிரசுரம் உங்களுக்குத் தெரிவிக்கும். இந்தத் துண்டுப்பிரசுரம் மிகவும் சுருக்கமாகத் தகவல்களை வழங்குகிறது, மேலும் இதைப் பற்றிய கூடுதல் தகவல்களை நீங்கள் அறிய விரும்பினால், நீங்கள் ஒரு மருத்துவரைச் சந்திக்கலாம்.

## குழந்தை பிறக்கும்போது ஏன் இறந்திருக்கிறது?

பிறப்பதற்கு முன்பே குழந்தை ஏன் இறக்கிறது என்று பல பெற்றோர்கள் கேட்கும் கேள்விக்கான விடையை எல்லாச்சந்தர்ப்பதிலும் விளக்க முடியாது, ஆனால் இதுபோன்ற 50%-70% இறப்புக்களுக்கான காரணங்களை அறியும் திறன் உள்ளது. பிறக்கும்போதே இறப்பதற்கான நிகழ்தகவைக் கருத்தில் கொண்டால், 200 பிறப்புகளில் ஒன்றில் குழந்தை இறந்து பிறக்கிறது. தாயின் வயிற்றில் குழந்தை இறப்பதற்கு, குழந்தை சரியாக விருத்தியடையாததே பொதுவான காரணமாகும். இது தவிர, சில தொற்று நோய்கள் ஏற்படல் , குழந்தையின் அசாதாரண வளர்ச்சி, தாயின் நீரிழிவு நோய், குழந்தை பிறக்கும் முன் நஞ்சுக்கொடி கருப்பையில் இருந்து பிரிதல் ,தாய்க்கு உயர் இரத்த அழுத்தத்துடன் கூடவே சிறுநீரில் அதிகப்படியான புரதம் வெளியேறல் ஆகியவற்றையும் காரணங்களாகக் குறிப்பிடலாம்.

உங்கள் குழந்தை ஏதேனும் காரணத்தால் இறந்தால், அதற்கான காரணத்தைக் கேட்க உங்களுக்கும் உங்கள் துணைக்கும் வாய்ப்புக் கிடைக்கும்.

**உங்கள் குழந்தை பிறப்பதற்கு முன்பே இறந்துவிட்டதா என்பதை எப்படி அறிவது?**

அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் மூலம்  இதை உறுதிப்படுத்த முடியும். இந்தப் பரிசோதனையில் குழந்தையின் இதயத்துடிப்பு நின்றுவிட்டதை அவதானிக்கலாம். அப்படியான சந்தர்ப்பத்தில், குழந்தை இறந்துவிட்டதா என்பதை உறுதிப்படுத்த மீண்டும் ஒருமுறை ஸ்கேன் செய்யப்படும்.

உங்கள் குழந்தை இறந்துவிட்டதாக மருத்துவர்கள் உறுதிப்படுத்திய பின்பும், சில வேளைகளில், வயிற்றில் குழந்தை அசைவதைப் போன்று  நீங்கள் உணரக்கூடும் . இது  இறந்த குழந்தை அமினோடிக் திரவத்தில் நகர்வதால் ஏற்படுகிறது .இதுபோன்ற சூழ்நிலைகளைத்  தாய் தாங்குவது கடினம், தாயின் மன நிலையை நல்ல முறையில் பராமரிக்க சுகாதாரப்  பணியாளர்களின் ஆதரவு முக்கியமானது.

**குழந்தை இறந்ததை உறுதிப்படுத்திய பிறகு என்ன நடக்கும்?**

குழந்தையின் மரணத்தை உறுதிசெய்த பிறகு, மருத்துவர் உங்களுக்கும் உங்கள் துணைக்கும் அதைப் பற்றித் தெரிவிப்பார். நீங்கள் குழந்தையைப்  பிரசவிக்கக்கூடிய முறைகள் மற்றும் நீங்கள் செய்ய வேண்டிய பரிசோதனைகள் பற்றி உங்களுக்குத் தெரிவிக்கப்படும். மேலும், மருத்துவக் குழு உங்களுக்கும் உங்கள் துணைக்கும் , நீங்கள் செய்யவேண்டிய பரிசோதனைகள் மற்றும் பிரசவ முறையைத் தீர்மானிக்கத் தேவையான அனைத்து ஆதரவையும், போதுமான கால அவகாசத்தையும் வளங்கும். மேலும், தாயின் உடல்நிலை சீராக உள்ளதா என்பதைப் பற்றி மருத்துவர் சிறப்பு கவனம் செலுத்துவர். தாய்க்குத் தொற்று ஏற்படுகிறதா, இரத்த அழுத்தம் அதிகரிக்கிறதா என்பதைப்  பரிசோதிப்பார்.

## பிரசவ வழிமுறைகள் எவை ?

உங்கள் மருத்துவர் உங்களுடனும் உங்கள் துணையுடனும் பிரசவ முறை மற்றும் பிரசவிக்கும் தேதி பற்றி விவாதிப்பார். தாயின் உடல்நிலை, முந்தைய பிரசவத் தகவல்கள், உங்கள் கர்ப்பத்தின் நிலை மற்றும் உங்களின் தனிப்பட்ட விருப்பம் ஆகியவற்றின் அடிப்படையில் முடிவு எடுக்கப்படும் பிரசவத்திற்குப் பிறகும், சுகாதாரக் குழு உங்கள் மேல் கூடுதல் கவனம் செலுத்தும். பெரும்பாலும் குடும்பத்தினருடன் தனியாக இருக்க உங்களுக்கு வாய்ப்பளிக்கப்படும் .

## மருந்துகள் மூலம் செயற்கையாகப் பிரசவ வலியைத் தூண்டுதல்

குழந்தை இறந்துவிட்டதை உறுதி செய்த பிறகு, மருந்துகளின் உதவியுடன் செயற்கையாக வலியைத் தூண்டி பிரசவம் செய்யப்படலாம். இவ்வாறு, செயற்கையாக வலியைத் தூண்டும் பல்வேறு முறைகள் உள்ளன, அவற்றைப் பற்றி உங்கள் மருத்துவர் உங்களுக்குத் தெரிவிப்பார். சில சமயங்களில், தாயின் மனநலத்தையும் உடல்நலத்தையும் கருத்திற் கொண்டு, பிரசவத்திற்கு முன் வீட்டிற்குச் சென்று திரும்புவதற்கான வாய்ப்பு வழங்கப்படலாம்.

## பிரசவம் இயற்கையாக நிகழும் வரை காத்திருத்தல்.

குழந்தை இறந்து விட்டது என்று உறுதியானால், சில தாய்மார்கள் செயற்கை முறையில் குழந்தையை பிறப்பிக்காமல் இயற்கையாகப் பிறக்கும் வரை காத்திருக்க விரும்புகிறார்கள். பொதுவாக, அம்னியோடிக் சவ்வு (பன்னீர்க்குடம்) சிதையாமலும், தாய் உடல்நலத்துடனும் இருந்தால் இயற்கையாகப் பிரசவிக்கும் பொருட்டு சில நாட்கள் பிரசவத்தைத் தாமதிப்பதில் பிரச்சனை இல்லை. பெரும்பாலான பெண்கள் குழந்தையின் இறப்பு உறுதிப்படுத்தப்பட்டு 3 வாரங்களுக்குள் குழந்தையைப் பெற்றெடுக்கிறார்கள். குழந்தை இறந்துவிட்டதை உறுதிசெய்த பிறகு, குழந்தை இயற்கையாகப் பிறக்கும் வரை காத்திருக்கும் பெண், பிரசவம் தாமதமாகும் போது குழந்தையின் தோற்றம் மாறும் என்பதை அறிந்திருக்க வேண்டும்.

பிறப்பு இயற்கையாக நடக்கும் வரை நீங்கள் காத்திருக்க முடிவு செய்திருந்தால், நீங்கள் மருத்துவமனையில் தங்கியிருக்க அறிவுறுத்தப்படலாம் , அங்கு மருத்துவர்கள் தொடர்ந்து உங்கள் உடல்நலத்தைக் கண்காணிப்பார்கள். குறிப்பாக, அதிக இரத்தப்பெருக்கை ஏற்படுத்தக்கூடிய, இரத்தத்தில் குருதிச் சிறுதடுக்கள் குறைவடைதல் மற்றும் கிருமித் தொற்று ஏற்படல் போன்ற நோய்களுக்காகப் பரிசோதிக்கப்படுவீர்கள். நீங்கள் தொற்றுக்குள்ளானாலோ, உயர் குருதி அழுத்தம் ஏற்பட்டாலோ அல்லது உங்கள் குருதிப் பரிசோதனை முடிவுகள் பிரசவத்தைத் தாமதிப்பது அபாயகரமானது என்று சுட்டினாலோ, நீங்கள் இயற்கையான பிரசவத்திற்காகக் காத்திருக்க அனுமதிக்கப்படமாட்டீர்கள். அதற்குப் பதிலாக, உங்களுக்குச் செயற்கையாகப் பிரசவ வலி ஏற்படுத்தப்படும்.சில பெண்கள் இயற்கையாகப் பிரசவிக்க எதிர்பார்த்திருக்கும் காலத்தில் அதிக பயத்தை உணர்வதால், விரைவாகப் பிரசவிக்கும் முறையையே தேர்ந்தெடுக்கிறார்கள்.

## குழந்தை இறந்துவிட்டது உறுதியானால் குழந்தையை எப்படிப் பிரசவிப்பது?

பொதுவாக, இதுபோன்ற சந்தர்ப்பங்களில், யோனி வழிப் பிரசவமே பரிந்துரைக்கப்படுன்கிறது. இம் முறை மூலம் ;

- தாய்க்கு ஏற்படக்கூடிய ஆபத்து குறைகின்றது
- பிரசவத்திற்குப் பிறகு விரைவில் வீட்டிற்குச் செல்ல முடியும்
- ஒப்பீட்டளவில் குறைவான நேரத்தில் ஆரோக்கிய நிலைக்குத் திரும்பலாம்
- எதிர்காலக் கர்ப்பங்களில் சிக்கல்கள் ஏற்படும் சாத்தியங்கள் குறைவு

அனைத்துக் காரணகாரியங்களையும் ஆராய்ந்தபின், உங்கள் விருப்பத்தையும் கருத்தில் எடுத்துக் கொண்டு, மருத்துவர் உங்களுக்கேற்ற பிரசவ முறையைத் தீர்மானிப்பார் . உங்களுக்கு இரத்தப் பெருக்கு (குறுத்திச் சிறுத்தட்டுக் குறைவடைவதால்) அல்லது தொற்று ஏற்படும் அபாயம் இருந்தால், உங்களுக்கு இடுப்புக்குக் கிழே வலி இழக்கச் செய்யும் (எபிட்யூரல்) முறை தவிர்ந்த ஏனைய வலி நிவாரணிகள் வழங்கப்படும்.

## நீங்கள் முன்பு சிசேரியன் சத்திர சிகிச்சை செய்திருந்தால்?

நீங்கள் முன்பு ஒரே ஒரு சிசேரியன் அறுவை சிகிச்சை செய்திருந்தால், உங்களுடன் கலந்துரையாடி, உங்கள் உடல்நிலையைக் கருத்தில் கொண்டு, இயற்கையான பிரசவத்துக்கு உட்பட நீங்கள் அனுமதிக்கப்படலாம். இருப்பினும் செயற்கையாக பிரசவவலியைத் தூண்டும் முறை ஏற்புடையதல்ல. நீங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட சிசேரியன் செய்திருந்தால், சிசேரியன் முறை மூலமே இறந்த குழந்தையும் பிரசவிக்கப்படும் .

## உங்கள் குழந்தை பிறந்ததும் என்ன நடக்கும்?

பெற்றோர், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு, இறந்த குழந்தையைப் பிரசவிப்பது அதிக மன அழுத்தத்தை ஏற்படுத்தும். எனவே, மருத்துவப் பணியாளர்கள் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் அதிக அளவில் உறுதுணையாக இருப்பார்கள். இறந்து பிறந்த குழந்தையைப் பார்க்கவோ அல்லது அனைத்துக்கொள்ளவோ, உங்களுக்கோ அல்லது உங்கள் குடும்பத்தினருக்கோ வாய்ப்பளிக்கப்படும், எனினும் அவ்வாறு செய்யாமல் விட உங்களுக்கு உரிமை உண்டு. மேலும், தாய் குழந்தையைக் கைகளில் வைத்திருக்க விரும்பினால், எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் வைத்திருக்க வாய்ப்பு உள்ளது. மேலும், இறந்த குழந்தையின் நினைவாக, புகைப்படங்களை எடுக்கவும், தலைமுடியையோ கையடையாளம், பாத அடையாளம் போன்றவற்றையோ வைத்திருக்கவும் பெற்றோருக்கு வாய்ப்பு உள்ளது.

## பிரசவத்திற்குப் பிறகு என்ன செய்வது?

இறந்த குழந்தை பிறந்த பிறகு, குழந்தையின் இறுதிச் சடங்குகள் பெற்றோரின் விருப்பப்படி மேற்கொள்ளப்படுகின்றன. எனவே , பெற்றோர்கள் தங்கள் மதஅனுட்டானாங்களைச் செய்ய விரும்பினால் அதற்க்கு அனுமதிக்கப்படுவர். குழந்தையின் இறப்பு 24 கர்ப்ப வாரங்கள் அல்லது அதற்கு மேல் ஏற்படும் போது குழந்தையின் இறப்பு பதிவு செய்யப்படுகிறது. தாய்க்கு வேறு எந்த அசௌகரியமோ அல்லது உடல்நலக் கோளாறுகளோ இல்லாவிட்டால், பிரசவத்திற்கு அடுத்த நாள் வீட்டிற்குச் செல்ல அனுமதிக்கப்படுவார். சில தாய்மார்கள், அவர்களின் மனநிலையைப் பொறுத்து, சில நேரங்களில் மருத்துவமனையில் உள்நோயாளியாகச் சிகிச்சை பெற மறுக்கிறார்கள்

சில தாய்மாருக்குப் பிரசவத்திற்குப் பிறகு தாய்ப்பால் சுரக்கக்கூடும் . இந்த நிலை அந்தத் தாய்மார்களை மனதளவிலும் உடலளவிலும் மிகவும் பாதிக்கும். எனவே, அந்தத் தாய்மார்களுக்குப் பால் சுரப்பதை நிறுத்த தேவையான மருந்துகளை மருத்துவர்கள் வழங்குவார்கள். சுகப்பிரசவத்தைப் போலவே, இப் பிரசவத்தின் பின்பும் சிறிதளவு வலி மற்றும் இரத்தப்போக்கு உங்களுக்கு ஏற்படலாம். ஆனால் இந்த அறிகுறிகளுக்கு கூடுதலாக, பிற உடல்நலப் பிரச்சினைகள் அல்லது அசௌகரியங்கள் இருந்தால், உடனடியாக மருத்துவ ஆலோசனையைப் பெற வேண்டும்.

உதாரணமாக ;

- அதிக இரத்தப்போக்கு
- அடிவயிற்றில் ஓயாத வலி
- பிறப்புறுப்பில் இருந்து சீழ் வெளியேற்றம்
- களைப்பாக உணர்தல்
- கால்களில் வலி
- சுவாசிப்பதில் சிரமம்,
- இருமலுடன் இரத்தம் வெளியேறல் ,
- நெஞ்சு வலி

**பிரசவத்திற்குப் பிறகு உங்களுக்கு என்ன பரிசோதனைகள் பரிந்துரைக்கப்படுகின்றன?**

குழந்தையின் இறப்புக்கான காரணத்தைக் கண்டறியும் நோக்கில், உங்களுக்கும், குழந்தைக்கும் சில பரிசோதனைகள் செய்யப்படும். 50%-70% இறப்புக்களுக்கு ஒரு திட்டவட்டமான காரணத்தைக் கண்டறிய முடியும். ஆனால் சில இறப்புகளுக்கு அத்தகைய உறுதியான காரணத்தை அடையாளம் காண முடியாது. மேலதிகமாக, இந்தச் சோதனைகள் எதிர்கால கர்ப்பங்களைச் சரியான முறையில் திட்டமிட உதவும்.
எனவே, செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள சில சோதனைகளுக்கு உட்பட நீங்களும் உங்கள் துணைவரும் ஒப்புதல் படிவத்தில் கையொப்பமிட வேண்டும். அத்தகைய சோதனைகள் பின்வருமாறு அமையலாம்:

- உங்கள் கர்ப்பத்தில் தொற்று அல்லது உயர்குருதி அழுத்தத்துடன் கூடிய சிறுநீரில் அதிக புரத வெளியேற்றம் போன்ற ஏதேனும் பிரச்சனைகள் உள்ளதா அல்லது உங்களுக்கு சிறுநீரகம் அல்லது கல்லீரல் தொடர்பான பிரச்சனைகள் உள்ளதா என்பதைக் கண்டறியும் பரிசோதனைகள்.
- நீரிழிவு அல்லது தைராய்டு பிரச்சினைகளைக் கண்டறியும் இரத்தப் பரிசோதனைகள்
- இரத்தம் அதிகளவில் கட்டிபடும் ஆபத்து உள்ளதா என்பதைத் தீர்மானிக்கும் இரத்தப் பரிசோதனைகள்
- தொற்று உள்ளதா என்பதைக் கண்டறிய தாயின் பிறப்புறுப்பு, கருப்பை வாய், நஞ்சுக்கொடி மற்றும் குழந்தையின் உடலில் இருந்து பெறப்படும் மாதிரிகள்.
- குழந்தையின் நிறமூர்த்தங்கள் (குரோமோசோம்கள்) அசாதாரணமானவையா என்பதை அறிய குழந்தையிலிருந்து எடுக்கப்படும் இரத்த மற்றும் தோல் மாதிரிகள் (பல இறந்த நிலையிலான பிறப்புகள் அசாதாரண நிறமூர்த்தங்களின் காரணமாகவே ஏற்படுகின்றன) குழந்தையின் நிறமூர்த்தங்கள் அசாதாரணமானவை என்பது உறுதிப்படுத்தப்பட்டால், நீங்களும் உங்கள் துணையும்கூட பரிசோதிக்கப்படுவீர்கள்.
- குழந்தையின் உடலில் மேற்கொள்ளப்படும் உடற்கூற்றுப் (பிரேத) பரிசோதனை, குழந்தையின் இறப்புக்கான காரணம் பற்றிய முக்கிய தகவல்களை வழங்கக்கூடும். மேலும், பெற்றோர்களின் விருப்பத்துக்கேற்ப உடற்கூற்றுச் சோதனை பகுதியளவாகவோ அல்லது பூரணமாகவோ மேற்கொள்ளப்படலாம். இதை மேற்கொள்ளப் பெற்றோர் ஒப்புதல் படிவத்தில் கையெழுத்திட வேண்டும். இவ்விடயத்தில் உங்கள் மத மற்றும் தனிப்பட்ட உரிமைகள் மதிக்கப்படும்.
- குழந்தையின் நஞ்சுக்கொடியைப் பரிசோதிப்பதன் மூலம் (உடற்கூற்றுப் பரிசோதனை செய்யப்படாத சந்தர்ப்பத்திலும் கூட) குழந்தையின் இறப்பு பற்றிய முக்கிய தகவல்களைப் பெறக்கூடும் . இதற்குப் பெற்றோரின் ஒப்புதல் தேவையில்லை.

**பிரசவத்திற்குப் பிறகு தாயின் நலனைத் தொடர்ந்து கண்காணிப்பது எப்படி?**

மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் முடிவுகளைப் பற்றி விவாதிக்கவும், பிரசவத்திற்குப் பிறகு உங்கள் உடல்நிலையைப் பற்றி அறியவும் மருத்துவரை மீண்டும் சந்திக்கப் பரிந்துரைக்கப்படுகிறது. வழக்கமாக, இந்தச் சந்திப்பு நீங்கள் செய்த பரிசோதனைகளின் முடிவுகள் கிடைக்கப் பெற்ற பிறகு செய்யப்படுகிறது. உங்கள் குழந்தைக்குப் பிரேத பரிசோதனை செய்யப்பட்டிருந்தால், பிரசவத்திற்குப் பிறகு சுமார் 6 வாரங்களுக்குப் பின் இந்தச் சந்திப்பு இருக்கும்.

உங்கள் மனதில் எழும் அனைத்துக் கேள்விகளையும் முன்கூட்டியே எழுதி வைத்திருப்பதன் மூலம் வைத்தியருடனான கலந்துரையாடலைப் பயன்மிக்கதாக்க முடியும். மேலும், நீங்கள் மீண்டும் ஒரு குழந்தையைக் கருத்தரிக்க விரும்புகிறீர்கள் என்றால், உங்களுக்கு வழங்கப்படக்கூடிய கவனிப்புப்பற்றி மருத்துவரிடம் விவாதிக்கலாம்.

**மீண்டும் கர்ப்பம் தரிக்கும்போது எடுக்க வேண்டிய கூடுதல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எவை ?**

நீங்கள் மீண்டும் கர்ப்பம் தரிக்க நினைத்தால், அதுபற்றி மருத்துவரிடம் தெரிவிப்பதும், கர்ப்பத்தை உறுதி செய்த உடனேயே மருத்துவரைச் சந்திப்பதும் அவசியம். முந்தைய கர்ப்பத்தின் கசப்பான அனுபவத்தால் ஏற்படும் பயம் காரணமாக, இந்தக் கர்ப்பகாலத்தில் மருத்துவரை அதிக தடவைகள் சந்திக்கச் சந்தர்ப்பம் வழங்கப்படும். இந்தக் கர்ப்ப காலத்தில், மருத்துவர் மற்றும் குடும்ப நல செவிலியரின் மேலதிக ஆதரவு உங்களுக்கு வழங்கப்படும். உங்கள் முந்தைய குழந்தையின் இறப்புக்கான காரணம் உறுதிசெய்யப்பட்டிருந்தால், இந்தக் கர்ப்ப காலத்தில் அத்தகைய நிலை ஏற்படாமல் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

நன்றி.